Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 124/2022**

**Deposition of PW. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிக்காளை | ஜாதி | : | |
| த/பெ | : | வீமராஜ் | தொழில் | : | சத்துணவு அமைப்பாளர் |
| கிராமம் | : | நடுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 62 /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.11.2024.

(Accused present)

முதல் விசாரணை

நான் நடுப்பட்டியில் குடியிருந்துகொண்டு சத்துணவு அமைப்பாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை, ஒரு தகராறு ஏற்பட்டு என்னை யாரோ ஒரு நபர் அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார். அதனால் கன்னிவாடி காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு கன்னிவாடி காவல்நிலையத்தில் நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆகும். அந்த புகாரின் படி இந்த வழக்கின் எதிரி ராமர் என்பவர் மீது இந்த வழக்கு பதிவு செய்துள்ளார்கள். அதன்பின்பு இவ்வழக்கின் எதிரி ராமர் என்பவர் என்னை அசிங்கமாக பேசி மிரட்டவில்லை என்பது தெரியவந்ததால் அவருடன் சமாதனாமாக சென்றுவிட்டேன். இந்த வழக்கில் மேல் நடவடிக்கை தேவையில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் சமாதனாமாக சென்று சமரச மனுவில் கையொப்பம் செய்துள்ளேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். புகார் மனுவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்வதில் எந்த ஆட்சேபணையும் இல்லை.

**Sd/.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 124/2022**

**Deposition of PW. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசன் | ஜாதி | : | |
| த/பெ | : | | தொழில் | : | சார்பு ஆய்வாளர், கன்னிவாடி காவல்நிலையம் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.11.2024.

(Accused A1 to A3 present)

முதல் விசாரணை

நான் தற்பொழுது கன்னிவாடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு. முத்துக்குமார் என்பவர் பணியிட மாறுதல் ஆகி வேறு நிலையத்திற்கு சென்றுவிட்ட நிலையில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா 1 மணிக்காளை என்பரும் எதிரியும் சமாதனாமாக சென்று சமரச மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் மேற்கண்ட அ.சா 1 பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால் வழக்கை விரைந்து முடிக்கும் நோக்கத்திற்காக ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். மேற்கண்ட சார்பு ஆய்வாளர் திரு. முத்துக்குமார் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றியுள்ளேன். அவரது கையொப்பம் எனக்கு தெரியும். கடந்த 11.01.2019 அன்று மேற்கண்ட சார்பு ஆய்வாளர் திரு. முத்துக்குமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது நடுப்பட்டியை சேர்ந்த விமல்ராஜ் மகன் மணிக்காளை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அன்றைய தினமே மதியம் 02.00 மணிக்கு நிலைய குற்ற எண். 8/2019 சட்டபிரிவுகள் 294(b), 506(1) இதச வின் படி அ.சா.ஆ 2 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.01.2019 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு சம்பவ இடமாக மாங்கரை எம். நடுப்பட்டி வாதி மணிக்காளை வீட்டின் அருகே சென்று சாட்சிகள் சீனிவாசன், நாட்ராயண் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து அ.சா.ஆ 3 ஆன மாதிரி வரைபடம் வரைந்து, அ.சா.ஆ 4 ஆன பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்பு மேற்கண்ட மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சாட்சிகள் மணிக்காளை, மணிமாறன், ராமகிருஷ்ணன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் எதிரி ராமர் என்பரை 13.01.2019 அன்று காலை 05.30

மணிக்கு எம். நடுப்பட்டி எதிரியின் வீட்டில் வைத்து கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். பின்பு வழக்கின் புலன் விசாரணை முடித்து 06.02.2019 அன்று எதிரி ராமர் என்பவர் மீது சட்டபிரிவுகள் 294(b), 506(1) இதச வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா 1 மற்றும் எதிரிகள் சமாதனாமாக சென்று இந்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா 1 காவல்நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சான்றாவணங்களான மாதிரிவரைபடம், பார்வைமகஜர் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் வழக்கிற்காக நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் சம்பவம் 08.01.2019 அன்று நடைபெற்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் 11.01.2019 அன்று கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 3 நாட்களுக்கான காலதாமதம் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் காலம் 8 இல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

**Sd/.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.